


**23. 03. 2026**

தலைப்புச் செய்திகள்

1. மேற்காசிய பகுதி நெருக்கடிகளில் இந்தியாவின் நிலைப்பாடு குறித்து பிரதமர் திரு.நரேந்திரமோடி மக்களவையில் இன்று பிற்பகல் உரையாற்றுகிறார்.

2. தூர்தர்ஷன் மற்றும் ஆகாஷ்வாணியில் தேசிய மாநில கட்சிகள் இலவசமாக கட்சி சார்ந்த ஒளி ஒலிபரப்புகளை மேற்கொள்ள தேர்தல் ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது.

3. தமிழ்நாட்டில் தேர்தல் விழிப்புணர்வு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4. நீலகிரி மாவட்டத்திற்கு வரும் சுற்றுலா பயணிகள் தேவைக்கு அதிகமான ரொக்கப்பணம் வைத்திருந்தால் பறிமுதல் செய்யப்படும் என்று மாவட்ட தேர்தல் அலுவலர் லட்சுமி பவ்யா தண்ணீரு கூறியுள்ளார்.

5. இத்தாலியில் நடைபெறும் சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் முதல் சுற்றில் சுமித் நாகல் – ஜெர்மனியின் **Henri Squire-**ஐ இன்று எதிர்கொள்கிறார்.

இனி விரிவான செய்திகள்

***************

பிரதமர்

மேற்காசிய பகுதிகளில் தொடரும் நெருக்கடிகளின் முக்கிய அம்சங்கள் மற்றும் இந்தியாவின் நிலைப்பாடு குறித்து பிரதமர் திரு.நரேந்திரமோடி மக்களவையில் இன்று பிற்பகல் எடுத்துரைக்கிறார்.

முன்னதாக நேற்று பாதுகாப்பிற்கான மத்திய அமைச்சரவை கூட்டத்தில், மேற்காசிய நிலவரம் குறித்து பிரதமர் விவாதித்த நிலையில், இதனால் ஒட்டுமொத்த உலகமும் பாதிக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

நாட்டு மக்களை பாதுகாப்பதற்கான அனைத்து முயற்சிகளின் அவசியத்தை எடுத்துரைத்த பிரதமர், குடிமக்களுக்கு தேவையான வசதிகளை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை அனைத்து அரசு துறைகளும் மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

பொருட்கள் பதுக்கப்படுவதை தடுக்க உரிய நடவடிக்கைகளை மாநில அரசுகள் மேற்கொள்ளவும் பிரதமர் உத்தரவிட்டார்.

அரசின் ஒட்டுமொத்த அணுகுமுறையை முன்னெடுத்து செல்லும் வகையில் அமைச்சர்கள் மற்றும் செயலர்கள் அடங்கிய குழுவை உருவாக்கி அவன செய்யவும் பிரதமர் வலியுறுத்தினார்.

அனைத்து பங்குதாரர்களுடன் உரிய ஆலோசனைகளை மேற்கொள்ளவும் பிரதமர் அறிவுறுத்தினார்.

இந்த கூட்டத்தின்போது உலகளாவிய நிலைமை, அவற்றை எதிர்கொள்வதற்காக இதுவரை

மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அமைச்சரவை செயலர் டாக்டர் டி.வி.சோமநாதன் விரிவாக எடுத்துரைத்தார்.

***************

கிஷன் ரெட்டி

நிலக்கரி துறையில் ஒதுக்கீடுகள் கடந்த சில ஆண்டுகளாக வெளிப்படைத்தன்மையுடன் இருப்பதாக மத்திய நிலக்கரித்துறை அமைச்சர் திரு. ஜி. கிஷன் ரெட்டி தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதில் அளித்த அவர் உலக அளவில் 5 ஆவது பெரிய நிலக்கரி நாடாக இந்தியா திகழ்கிறது என்றும், அடுத்த 70 ஆண்டுகளுக்கான எரிசக்தி தேவையை இது பூர்த்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறினார்.

உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்தும் வகையில் நிலக்கரி கண்டறியும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் கூறினார்.

***************

மனோகர் லால்

பிரதமரின் மின்சார பேருந்து சேவை திட்டத்தின் கீழ் 225 மின்சார பேருந்துகள் செயல்பாட்டிற்கு வந்துள்ளதாக மத்திய வீட்டு வசதி நகர்புற விவகாரங்களுக்கான அமைச்சர் திரு.மனோகர் லால் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இன்று இதனை தெரிவித்த அமைச்சர் இந்த திட்டம், படிப்படியாக முன்னேற்றம் கண்டு வருவதுடன், தூய்மையான பொது போக்குவரத்தை உறுதி செய்வதாக குறிப்பிட்டார்.

இந்த திட்டத்திற்கான ஒப்பந்தபுள்ளிகள் இறுதி செய்யப்பட்டு, 6 ஆயிரத்து 500 பேருந்துகளுக்கான ஒப்பந்தம், மாநிலங்களுடன் கையெழுத்தாகியுள்ளதாக கூறினார்.

அடுத்த ஆண்டு இறுதிக்குள், முதற்கட்டமாக 10 ஆயிரம் பேருந்துகள், செயல்பாட்டிற்கு வரும் என்றும் குறிப்பிட்டார்.

சுற்றுச்சூழல் மாசுவை தடுத்து தூய்மையான நகர்புற போக்குவரத்திற்கு இந்த திட்டம் வழிகோலுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

***************

பகத்சிங்

சுதந்திர போராட்ட வீரர்கள் பகத்சிங், ராஜ்குரு, சுக்தேவ் ஆகியோரின் நினைவு தினத்தை ஒட்டி தலைவர்கள் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

குடியரசு துணை தலைவர் திரு. சி. பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்தியில் இம்மூவரின் துணிச்சலும், தீர்க்கமும், எல்லையற்ற தியாகமும் வரும் தலைமுறையினருக்கு தூண்டுகோலாக அமையும் என்று கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடி தமது செய்தியில் தேசத்திற்காக இன்னுயிர் ஈந்த இம்மூன்று வீரர்களின் தியாகமும், தேசப்பற்றும், அளப்பரிய துணிச்சலும், எண்ணற்ற இந்தியர்களுக்கு என்றென்றும் உந்து சக்தியாக திகழ்வதாக கூறியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத்சிங் தமது செய்தியில் நாட்டின் சுதந்திரத்திற்கான போராட்டத்தில் பகத்சிங், ராஜ்குரு, சுக்தேவின் தியாகம் எதிர்கால சந்ததியினருக்கு என்றென்றும் உத்வேகமாக இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் விடுத்துள்ள செய்தியில் இவ்வீரர்களின் தியாகமும், மன உறுதியும் நாட்டின் சுதந்திரத்திற்கு வழிகோலியதாக புகழஞ்சலி செலுத்தினார்.

மக்களவையிலும் மாநிலங்களவையிலும் இம்மூவருக்கும் புகழஞ்சலி செலுத்தப்பட்டது.

மிக குறைந்த வயதில் துணிச்சலுடன் நாட்டின் விடுதலைக்காக போராடி மகத்தான தியாகத்தை இவ்வீரர்கள் புரிந்திருப்பதாக மக்களவை தலைவர் திரு.ஓம்.பிர்லா குறிப்பிட்டார்.

***************

சி.ஆர்.பாட்டில்

ஜல்ஜீவன் நீர்மேலாண்மை இயக்கத்தின் கீழ் 16 கோடிக்கும் அதிகமான இல்லங்களுக்கு குழாய் வழியிலான குடிநீர் வசதி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய

நீர்மேலாண்மை அமைச்சர் திரு.சி.ஆர்.பாட்டில் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் உலக தண்ணீர் தின மாநாட்டில் இன்று உரையாற்றிய அமைச்சர், நீர்பாதுகாப்பு மற்றும் நீடித்த நீர் மேலாண்மைக்கான கருத்துக்கள் பகிர்விற்கு வாய்ப்புகளின் திறவுகோலாக இத்தளம் திகழ்கிறது என்றார்.

நாட்டு மக்கள் நீர் பாதுகாப்பு மற்றும் நீர் சேமிப்பு நடைமுறைகளை செயல்படுத்த அவர் அழைப்பு விடுத்தார்.

நீர்வள மேம்பாட்டிற்கு திறன்மிகு ஆக்கப்பூர்வமான தீர்வுகளுக்கு அங்கீகாரம் வழங்கும் வகையில் ஜல்சக்தி ஹேக்கத்தான் வெற்றியாளர்களுக்கு, அமைச்சர் விருதுகளை வழங்கி கவுரவித்தார்.

***************

ஊடகம் - அனுமதி

நான்கு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு தூர்தர்ஷன் மற்றும் ஆகாஷ்வாணியில் தேர்தலுக்காக தேசிய மாநில கட்சிகள் இலவசமாக தத்தம் கட்சி சார்ந்த ஒலி ஒளிபரப்புகளை மேற்கொள்ள தேர்தல் ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது.

இதன்கீழ் ஒவ்வொரு கட்சிக்கும் அந்தந்த பிராந்தியங்களில் தலா 45 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அரசியல் கட்சிகள் தாங்கள் பேச உள்ள தேர்தல் தொகுப்பு மற்றும் தேர்தல் சார்ந்த பதிவுகளை

முன்னதாகவே சமர்ப்பித்து, தேர்தல் நெறிமுறைகளை உறுதியாக பின்பற்ற வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பிரசார் பாரதி நிர்ணயித்துள்ள தொழில்நுட்ப நிர்ணயங்களுக்கு ஏற்ப ஒலி, ஒளிப்பதிவு அரங்குகளில் இதற்கான பதிவுகள் இடம்பெறும்.

இதுதவிர இரண்டு குழுவிவாத பேச்சுவார்த்தைகளுக்கும் பிரசார் பாரதி அனுமதி வழங்கியுள்ளது.

தகுதிவாய்ந்த அரசியல் கட்சிகள் தத்தம் கட்சி சார்பாக ஒரு பிரதிநிதியை இதற்கென நியமிக்கலாம் என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

***************

வேட்புமனு

புதுச்சேரி யூனியன் பிரதேசம், கேரளம், அஸ்ஸாம் மாநிலங்களில் வரும் 9 ஆம் தேதி நடைபெற உள்ள சட்டப்பேரவை தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று பிற்பகல் 3 மணியுடன் நிறைவடைகிறது.

வேட்பு மனுக்கள் நாளை பரிசீலிக்கப்படுகின்றன.

அவற்றை திரும்பெற வரும் 26ஆம் தேதி கடைசி நாளாகும்.

***************

விழிப்புணர்வு

தமிழ்நாட்டில் தேர்தல் விழிப்புணர்வு நடவடிக்கைகளும், தேர்தல் சார்ந்த நடைமுறைகளும் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் "நமது இலக்கு 100 சதவிகிதம் வாக்கு, என் வாக்கு என் பாரதம்" என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட ராட்சத பலூன் மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சரவணன் தலைமையில் இன்று பறக்கவிடப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

தூத்துக்குடி மாநகராட்சியில் 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி மாற்றுத்திறனாளிகளின் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.இளம் பகவத் இன்று துவக்கிவைத்தார்.

வாக்களிப்பது மிகவும் அவசியம் என்று இப்பேரணியில் பங்கேற்ற காசிராஜன் கூறியுள்ளார்.

வாய்ஸ்

இதேபோல் கிருஷ்ணகிரியிலும் மாற்றுத்திறனாளிகள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.தினேஷ் குமார் தொடங்கிவைத்தார்.

அரியலூர் அரசு கலை அறிவியல் கல்லூரியில் வாக்களிப்பதன் அவசியம் குறித்து மாணாக்கரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் கையெழுத்து இயக்கம் இன்று தொடங்கியது.

கல்லூரி வளாகத்தில் தேர்தல் விழிப்புணர்வு பேரணி மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.ரத்தினசாமி தலைமையில் நடைபெற்றது.

நாமக்கல், பெரம்பலூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலும் இத்தகைய விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெற்றன.

***************

பறக்கும்படை

திண்டுக்கல் தாடிக்கொம்பு சாலையில் பறக்கும் படையினர் இன்று மேற்கொண்ட சோதனையில் உரிய ஆவணம் இன்றி இருசக்கர வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட 84 ஆயிரத்து 500 ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டு மாவட்ட கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டது.

***************

நீலகிரி

நீலகிரி மாவட்டத்திற்கு வரும் சுற்றுலா பயணிகள் தேவைக்கு அதிகமாக ரொக்கப்பணம் அல்லது தங்கத்தை வைத்திருந்தால் அவை பறிமுதல் செய்யப்படும் என்று மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அரசியல் கட்சி பரதிநிதிகள் முன்னிலையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் ஒதுக்கீட்டிற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாவட்ட தேர்தல் கட்டுப்பாட்டு அறைக்கு கடந்த 8 நாட்களில் 71 புகார்கள் கிடைக்கப்பெற்றதாகவும் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தேர்தல் படையினரின் வாகன சோதனையில் மாவட்டத்தில் இதுவரை 41 லட்சம் ரூபாய் ரொக்க பணமும், இரண்டேகால் கோடி ரூபாய் மதிப்பிலான பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

வாய்ஸ்

***************

உலக வானிலை தினம்

உலக வானிலை தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இன்றைய கண்காணிப்பு நாளைய பாதுகாப்பு என்பதை கருப்பொருளாக கொண்டு நடைபெறும் இத்தினத்தை ஒட்டி நாடுமுழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

***************

டென்னிஸ்

இத்தாலியில் நடைபெறும் சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் முதல் சுற்றில் இந்தியாவின் சுமித் நாகல் – ஜெர்மனியின் **Henri Squire-**ஐ இன்று எதிர்கொள்கிறார்.

***************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது